தேதி - 02.04.2026

**COS**.**No**.4/2024

வா.சா. 1 - திருமதி. **S**.காவேரிப்பிரியா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

பிரதிவாதி எனக்கு பணம் கொடுக்க வேண்டியதை ஏமாற்றிவிட்டதாக கடந்த 03.11.2023 அன்று மதுரை குற்றப்பிரிவு போலிசில் புகார் அளித்தேன். DCB ல் கொடுத்த புகாரின் அடிப்படையில் கட்டிடத்தின் உறுதிதன்மையை பற்றி வா.சா.ஆ.10 ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், ஆனால் சேதத்தின் மதிப்பு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே மேற்படி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் வா.சா.ஆ.10 கிடைக்கப் பெற்றது. வழக்கு பிராதில் கட்டிடத்தை வா.சா.ஆ.10 ல் குறிப்பிட்டுள்ள பொறியாளர் திவ்யா என்பவர் தான் கட்டிடத்தை பார்வையிட்டு மதிப்பீடு செய்தார் என்று குறிப்பிட்டுள்ளேன். இந்த புகார் சம்பந்தமாக DCB காவல்நிலையத்தில் பிரதிவாதிக்கு எதிராக FIR பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. எனது புகாரின் அடிப்படையில் விசாரணை நடந்தது என்றும், Premediation எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2026.04.06 10:25:26 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.